**கவனிக்க.-** *2020.08.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2189 - 2020 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2020.08.14

*2189 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | 1336 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1330 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*2019.10.25 ஆந் திகதிய 1974 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்ட பின்வரும் பாதை தொடர்பாக எதிர்ப்புகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதனால் பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிட்ட பாதை பிரதேச சபைக்கு உரித்தான பாதையாகக் கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*எச். ஏ. ஆனந்த ஜயவிலால்,*
*தவிசாளர்,*
*ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.*

| | | |
|---|---|---|
| *பாதையின் பெயர்* | : | *அமுணுகடுள்ள* |
| *ஆரம்பம்* | : | *கட்டுகஸ்தோட்டை -குருநாகல் வீதியின் 5 ஆவது மைல்கல் அருகில்* |
| *முடிவு* | : | *எம்புல்புர கிராமத்தின் முடிவு வரையில்* |
| *நீளம்* | : | *1400 அடி* |
| *அகலம்* | : | *10 அடி* |

*08-249*

---

## வரகாபொல பிரதேச சபை

*கிராமிய வீதிகளைப் பெயரிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அறிவித்தல்*

*வரகாபொல பிரதேச சபையின் 2019.11.07 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் இ- II இன் கீழ் சபை அங்கீகாரம் பெறப்பட்ட கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வீதியை, முன்மொழியப்பட்டுள்ள பெயர்களில் பிரகடனப்படுத்துதல் தொடர்பாக எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லை என்பதுடன், 1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் மற்றும் நினைவுச் சின்னங்களை அமைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் தொடர்பான சட்டத்தின் கீழ் 6ஆம் பிரிவு மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விளைவாந்தன்மை ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ், மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆம் பிரிவின் பிரகாரம் 2020.06.19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிக்காக முன்மொழியப்பட்டுள்ள பெயர் உபயோகிக்கப்படுமென பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*வரகாபொல, மாஹேன சுதர்சனாராம விகாரை வீதி- "வரகாபொல பாரதீ நாஹிமி மாவத்தை" என*

*தவிசாளர்,*
*வரகாபொல பிரதேச சபை.*

*08-307*

## திக்வெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 (1) (ஆ) வின் கீழ் அறிவித்தல்*

*தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் திக்வெல்ல பிரதேச சபையால் 1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 (1) இன் படி 2020.06.23 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், திக்வெல்ல பிரதேச சபை முடிவு இல. 5.1.5/5.1.6 இன் கீழ் ஒரு சாலையாக அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அறிவிப்பை வர்த்தமானியில் வெளியிட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் உரிமை கோரலை நிரூபிக்க 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 24 (2) அதன்படி செயல்படும்படி கேட்கப்படுகிறீர்கள்.*

*இந்த காலகட்டத்தில் இந்த அறிவிப்புக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் திக்வெல்ல பிரதேச சபைக்கு சொந்தமான சாலைகள் என்று பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கின்றேன்.*

*கித்சர முதுகுமாரன,*
*தலைவர்,*
*திக்வெல்ல பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்வெல்ல,*
*2020, யுலை 30.*

### அட்டவணை

| தொ. இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | வீதியின் வலது பக்க காணி | வீதியின் இடது பக்க காணி | வீதியின் நீளம் மீற்றர் (m) | வீதியின் அகலம் மீற்றர் (m) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | பொருள் அவென்யு | சமுர்த்தி மாவத்தை | கரம்ப கோஷேனா காணி | 1. திரு. பி. எச். சமனின் காணி | 1. திரு. அபெரத்னா திச நாயக்கவின் காணி<br>2. திரு. ஹசரா மிஹிரங் காவின் காணி<br>3. திரு. அனுரா மகா குமாராவின் காணி<br>4. திரு. எச். ஜி. கே. அரியசேனாவின் காணி<br>5. திருமதி எச். டபிள்யூ. சோமலதாவின் காணி<br>6. திரு. கே. டபிள்யூ. ஏ. கலரத்னாவின் காணி<br>7. திரு. எச். ஜி. கே. பிய சிரியின் காணி | 60 மீ. தொலைவில்<br>100 மீ. தொலைவில் (சாலையின் மொத்த நீளம் 160) | 3 மீ.<br>2 முதல் 2.5 மீ. வரை |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | வீதியின் வலது பக்க காணி | வீதியின் இடது பக்க காணி | வீதியின் நீளம் மீற்றர் (m) | வீதியின் அகலம் மீற்றர் (m) |
|---|---|---|---|---|---|---|---|
| 02 | இரண் டாவது பாதை | சமுர்த்தி மாவத்தை | திருமதி டபி. எம்.ஜீ. அமரசீலி/ திரு. டபி. எம். ஜீ. அரியதாசவின் காணிகள் | 1. திரு. எல்.ஜீ. சுசாந்தாவின் காணி<br>2. திரு. எச். யூ. நதுன் பிரதீப் நிஷங்காவின் காணி | 1. திரு. டபிள்யூ. எம். ஜீ. புதிகா சம்பத்தின் காணி<br>2. திருமதி டபிள்யூ. எம். ஜீ. அமரலதவின் காணி | 60 மீ. | 3 மீ. |

08-418

---

**பண்டாரவளை மாநகர சபை**

சுயேச்சை குழு இல. 01 இற்கான யாப்பு

**01 ஆம் அத்தியாயம்**

1. கட்சியின் பெயர் மற்றும் அதிகாரப் பிரதேசம் — பண்டாரவளை மாநகர சபை சுயேச்சை குழு இலக்கம் 01 எனக் குறிப்பிடப்பட வேண்டும். பண்டாரவளை நகர சபை அதிகாரப் பிரதேசமாகும்.

2. சின்னம் மற்றும் நிறம் — அச் சுயேச்சைக் குழுவின் சின்னம் கடிகாரம் என்பதோடு, நிறமானது மஞ்சள் நிறமாகும். ஆயினும், தேவையேற்படின் சின்னத்தை மற்றும் நிறத்தினை மாற்றம் செய்ய இயலும்.

3. குறிக்கோள் — பண்டாரவளை மாநகர சபை அதிகார பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக மாநகர சபைக்கு வேட்புமனு முன்வைக்கவும், அப்படி முன்வைத்தன் பின்னர் தேர்தல்களின் பின்னர் பண்டாரவளை மாநகர சபையின் அதிகார பலத்தினை பெற்றுக் கொள்வதற்கும், அதிகார பலத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் அவ்வதிகார பிரதேசத்தினுள் வாழும் மக்களின் கல்விச் செயற்பாடுகள், சுகாதார நிலமைகளை முகாமைத்துவப் படுத்தல், உயர் தரத்திற்கு ஏற்படுத்தல், சர்வஜன வாக்குரிமை மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகளை ஏற்றுக் கொண்டு சம அந்தஸ்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறிக்கோளினை நடை முறைப்படுத்துவதற்கான அனைத்து துணைச் செயற்பாடுகளையும் நிறைவேற்றல்.

4. நடைமுறைக்கு வரும் திகதி — 2018.12.31 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்

5. கட்சி உறுப்புரிமை — இந்த யாப்பு மற்றும் யாப்பின் குறிக்கோளினை செயற்படுத்துவதற்காக 15 வயதிற்கு குறையாத எந்தவொரு நபருக்கும் உறுப்புரிமையினை

பெற்றுக்கொள்ள முடியுமாவதோடு, பண்டாரவளை மாநகர சபையின் சுயேச்சை குழு இலக்கம் 01 இல் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் போட்டியிட்டு அதிகாரத்துக்கு நியமனமாகும் எந்தவொரு உறுப்பினரும் இந்த யாப்பின் கீழ் உறுப்பினர் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, அப்படிப்பட்ட அனைத்து உறுப்பினர் களும் இந்த யாப்பின் சரத்துக்களுடன் கட்டுபட்டிருப்பர். அப்படி ஏற்றுக் கொண்ட அனைத்து உறுப்பினரும் இந்த யாப்பினை ஏற்றுக் கொண்டதாகவும் அதற்கு இசைந்து செயற்படுவதாகவும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.1 உறுப்புரிமை தொடர்பான நிபந்தனைகள்

உறுப்புரிமையினை ஏற்றுக் கொள்ளும் எந்த ஒரு நபரும் அதாவது வேட்பாளரொருவர் அல்லது உறுப்பினரொருவர் கீழ்வரும் விடயங்களுக்கு உடன்படல் வேண்டும்.

(அ) கட்சியின் கோட்பாடுகள், குறிக்கோள், மரபு நெறிப்பாடுகள் போன்றவற்றை ஏற்றுக் கொள்ளல்.

(ஆ) கட்சியினால் வேட்பு மனு செய்யப்படும் அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் அந்தந்த வேட்பாளர்களுக்கு எதிராக முன்வரும் பிற நபர்களுக்கு ஒத்துழைப்பு நல்காமை.

(இ) உறுப்பினர் ஒருவராக தெரிவாகினால் குழுத் தலைவரின் சட்டபூர்வமான கட்டளைகளை கடைப்பிடித்தல், கட்டுப்படல், தலைவரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு உடன்படல் மற்றும் கடைப்பிடித்தல்.

(ஈ) சுயேச்சை குழு 01 என குறிப்பிடப்படும் குழுவினை கட்சியாக கருதுதல்.

(உ) பல்வேறுபட்ட வெவ்வேறான அரசியல் கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமை மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட உடன்பாடுகளுக்கு எதிராகவிருக்கும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும், செயற்பாட்டுக்கும் ஒத்துழைப்பு வழங்காமை.

(ஊ) குழுத்தலைவர் மற்றும் அல்லது தெரிவாகி உள்ள உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் பிரசித்தமாக விமர்சனங்கள் மேற்கொள்ளல் கூடாது என்பதுடன் குழுக் கூட்டங்களில் தேவையான விமர்சனங்களை செய்ய வேண்டும் என்பதுடன் அதற்கப்பால் ஒருங்கினைவு எனும் எண்ணம் சிதறுண்டு செல்லும் வகையிலான விமர்சனங்களை செய்தல் கூடாது.

(எ) யாதேனுமொரு உறுப்பினர் தேர்தலில் தெரிவாகிய உறுப்பினராகவிருப்பின் சபையினுள் அல்லது சபை அமர்வுகளில் குழுத்தலைவரின் தீர்மானங்களுக்கு உடன்பாடு தெரிவிக்க வேண்டியதுடன், வாக்கெடுப்பு ஒன்றின் போது எதிர்க்கட்சியின் பரிந்துரைகளுக்கு வாக்கினை வழங்குதல் அல்லது சுயேட்சைக்குழு இந்நிகழ்ச்சிக்கு உள்ளாகும் விதத்தில் வாக்களிப்பதை தவிர்த்தல்.

6. ஒழுக்காற்று அதிகாரங்கள்

(அ) எந்வொரு அங்கத்தவரினாலும்/ உறுப்பினரினாலும் இன்னுமொரு அங்கத்தவருக்கு/ உறுப்பினருக்கு/ குழுவின் தலைவருக்கு தடங்கல் புரிதல், கேவலப்படுத்துதல், மிரட்டல் விடுத்தல் போன்றவையோ அல்லது தாக்குதல் மேற்கொள்ளவோ அல்லது பிரசித்தமாக குழுவின்

கொள்கையை விமர்சித்தல் அல்லது வேறு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு நல்குதல் அல்லது கருத்து வெளியிடலோ குழுவின் கொள்கைக்கு மற்றும் ஒருங்கிசைவிற்கு இழுக்கு ஏற்படுமாறான பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்கும் அல்லது இகழ்ச்சிக்கு உள்ளாக்கப்படும் அல்லது பொதுமக்களின் இகழ்ச்சிக்கு காரணமாகும் எந்வொரு செயற்பாட்டிலும் ஈடுபடல் கூடாது.

(ஆ) சுயேச்சை குழுவின் முகாமைத்துவ குழுவிற்கு அல்லது அதன் அங்கத்தவரொருவருக்கு தடங்கல் புரிதல், மிரட்டல் விடுத்தல், கேவலப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்தல்.

(இ) மற்றுமொரு கட்சிக்கோ அல்லது சுயேச்சை குழுவொன்றின் அங்கத்தவருக்கு அல்லது உறுப்பினரொருவருக்கோ அல்லது அமைச்சர் ஒருவருக்கு அரசியல் சார்ந்து ஆதரவு வழங்க கூடாது என்பதுடன் குழுவினால் பண்டாரவளை மாநகர சபையின் அதிகாரத்தை பெற்றுக் கொண்டிருப்பின் அவ்வதிகாரம் இல்லாமலாகும் வண்ணம் மற்றுமொரு கட்சிக்கு ஆதரவு வழங்குதல், வாக்களித்தல், சபை இடம் பெறும் போது இன்னுமொரு உறுப்பினரை அல்லது தலைவரை விமர்சனம் செய்தல் கூடாது.

(ஈ) அனைத்து உறுப்பினர்களும் முன்மாதிரியுடனும் கண்ணியமான முறையிலும் நடந்துக் கொள்ள வேண்டுமென்பதுடன் மாநகர சபையின் கௌரவத்தை காக்கும் விதத்தில் எச் சந்தர்ப்பத்திலும் செயற்படல் வேண்டும்.

7. முகாமைத்துவ குழு

சுயேச்சைக்குழு மற்றும் அதன் கொள்கைகளை நடைமுறைப் படுத்தல் கொள்கை அமைத்தல், கட்டளைகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்காக முகாமைத்துவ குழு என குழுவொன்று தாபிக்கப்பட வேண்டும் என்பதோடு அக்குழுவானது பதினொரு பேரை கொண்டமைந் திருத்தல் வேண்டும்.

8. முகாமைத்துவ குழுவின் அமைப்பு

முகாமைத்துவ குழுவானது ஆசிரியர் சேவை புரியும் ஒருவரையும் சட்டத்தரனி ஒருவரையும் வியாபாரம் மேற்கொள்ளும் ஒருவரையும் ஓய்வு பெற்ற அரச ஊழியரொருவரையும் மற்றும் வேறு சாதாரண நபர்கள் ஆறுபேரையும் உள்ளடக்கியிருக்க வேண்டியதுடன் குழுவின் தலைவர் அந்த முகாமைத்துவ குழுவின் பிரதானியாக இருத்தல் வேண்டும். அக்குழுவே ஒழுக்காற்று அதிகாரியுமாகும்.

9. முகாமைத்துவக் குழு தீர்மானம்

முகாமைத்துவ குழுவினது தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதுடன், தீர்மானம் மிக்க சந்தர்ப்பங்களில் குழுவின் தலைவருக்கு தனது சொந்த வாக்கிற்கு மேலதிகமாக ஒரு தீர்க்கமான வகாக்கொன்று கிடைக்கப் பெறல் வேண்டும்.

10. முகாமைத்துவ குழுவின் அதிகாரம்

(i) தேர்தலொன்றுக்கு தேவைப்படும் வேட்பு மனுவினை தயாரித்தல்
(ii) தேர்தலொன்றுக்கு போட்டியிடுவதற்கான செயற்பாடுகளை உருவாக்கல்
(iii) யாப்பு திருத்தங்களை மேற்கொள்ளல், கட்டளைகள் வழங்கல், நிலையியற் கட்டளை தயாரித்தல்.

(iv) அங்கத்தவர்களின் மற்றும் உறுப்பினர்களின்/அமைச்சர்களின் ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(v) கட்சியினது/சுயேச்சை குழுவினது குறிக்கோளினை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

11. அளவுத் திட்டம் — முகாமைத்துவ குழுவினது அளவானது உறுப்பினர் எண்ணிக்கையில் 1/4 பகுதிக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

12. குழுவின் தலைவர் — குழுவின் தலைவர் குழுவின் பிரதானியாவார். அவரால் சட்டபூர்வமாக எடுக்கப்படும் தீர்மானங்கள் குழுவின் அனுமதிக்குட்பட்டு இறுதித் தீர்மானமாக கொள்ளப்படும்.

13. நிதி — சுயேச்சை குழு இலக்கம் 01 இற்காக எந்தவொரு நிதியும் இருத்தல் கூடாது என்பதுடன் நிதிச்சேகரிப்பதற்கு எந்தவொரு அங்கத்தவருக்கும் அல்லது உறுப்பினருக்கும் உரிமையில்லை. ஆயினும், தெரிவாகிய உறுப்பினர்களின் சம்பளத்தில் உறுப்பினர்களின் மன்ற நிதி என நிதிமுறைமையொன்று ஆரம்பிக்க முடியுமென்பதுடன் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட வங்கியொன்றில் வைப்பிலிடப்படல் வேண்டும். அந் நிதியில் குழுவின் உடன்பாட்டுடன் பணம் செலவழித்தல், முதலீடு செய்தல் முடியுமென்பதுடன் அது மிகக்கிரமமான முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். அக் கணக்கினை செயற்படுத்துவதற்கு குழுவின் தலைவர் மற்றும் இன்னுமொரு உறுப்பினருக்கு அதிகாரம் வழங்கப்படும்.

14. நகர பிதா மற்றும் பிரதி நகரபிதா அவர்களை நியமித்தல் — குழுவின் தலைவர் நகர பிதாவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் பிரதி நகர பிதாவினை நியமிப்பது நகர பிதா அவர்களின் விருப்பின் பேரில் இடம் பெறல் வேண்டும். யாதேனும் ஒரு காரணத்தினால் நகர பிதாவின் பதவியானது, மரணமடைதல், சொந்த விருப்பின் பேரில் விலகுதல் அல்லது வேறொரு செயற்பாட்டின் காரணமாக வெற்றிடமாக நேரிட்டால் பிரதி நகர பிதா அவர்கள், நகர பிதாவாக வேண்டுமென்பதுடன் அவர் குழுவின் தலைவராகுதலும் வேண்டும்.

15. செயலாளர் — குழுவின் கூட்ட அறிக்கையிடல், ஆவணங்களுக்கு பொறுப்பாகவிருத்தல், ஆவண தொடர்பாடலை மேற்கொள்ளல், ஒழுக்காற்று செயற்பாடுகளில் நடைபெறும் கூட்டங்களின் அறிக்கையிடல், சுயேச்சை குழுவின் எழுத்து மூலச் செயற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வதற்காக உறுப்பினரல்லாத/அமைச்சரல்லாத ஒருவரை நியமித்தல் வேண்டும். அந் நியமிப்பின் விருப்பமும் அதிகாரம் குழுவின் தலைவருக்குரியதாகும்.

16. அங்கத்தவர் அந்தஸ்து அல்லது உறுப்பினர் அந்தஸ்து இழக்கப்படல் — சட்டத்தில் குறிப்பிடப்படும் குறிக்கோள்களுக்கு இடையூறு ஏற்படும் விதத்தில் முறையற்று செயற்படல் அப்படி செய்வதற்கான குழறுபடிகளை மேற்கொள்ளல், குழுத் தலைவரின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படல், குழு எனும் உணர்வின்றி செயற்படல், சபை அமர்வு ஒன்று இடம் பெறுகையில் மற்றுமொரு கட்சியின் அல்லது கட்சியின் பரிந்துரையொன்றுக்கு உடன்படல், வாக்கினை

பயன்படுத்துதல் மற்றும் குழுவின் அதிகாரத்தை இழக்க நேரிடும் விதத்திலான வாக்கினை பயன்படுத்துதல், சமூக ஊடகங்களில் சுயேச்சை குழுவின் நிலைப்பாட்டிற்கு இழுக்கு ஏற்படுத்துமாறான செயற்பாடுகள் மற்றும் கருத்துக்களை தெரிவிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கும், குற்றவாளியாக நிரூபிக்கப்படின் அங்கத்தவர்/உறுப்பினர் அந்தஸ்திலிருந்து விலக்கி விடுவதற்கும் முடியுமாயித்தல் வேண்டும். யாதேனும் ஒரு உறுப்பினரின் அங்கத்துவத்தை இழக்க செய்தவுடன் அவரால் மாநகர சபையிலோ அல்லத கட்சியிலோ யாதெனுமொரு பதவி வகிக்கப்பட்டதாயின் அப் பதவியும் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

*17. விடுபட்ட விடயங்கள்*

இந்த யாப்பில் வளங்கள் அமையப் பெற்றிராத விடயங்கள் தொடர்பில் யாதேனுமொரு பிரச்சினையோ, சிக்கலோ ஏற்படின் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தினை கருத்தாகக் கொண்டு முகாமைத்துவக் குழுவினால் தேவையான விதிகளை அமைக்க முடியும் என்பதுடன், அவ்விதிகளும் முகாமைத்துவ குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிக் கெள்ளப்படல் வேண்டும். அப்படி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட விதியானது இச் சட்டத்தினுடைய பகுதியொன்றாக ஏற்றுக் கொள்வதற்கு அனைத்து அங்கத்தவர்கள்/உறுப்பினர்கள் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு கேள்வியெழுப்பு வதற்கான உரிமை எந்தவொரு அங்கத்தவருக்கோ/ உறுப்பினருக்கோ இல்லாதிருத்தல் வேண்டும்.

*08-419*

---

# வரவு செலவு திரட்டுக்கள்

## வருமான செலவினக் கூற்று

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் தலைவர் கே. தச்சனாமூர்த்தி ஆகிய நான், ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை பகிரங்கப்படுத்துவதற்கு 2020.07.14 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்ட தீர்மான இலக்கம் 05.01 இன் படி தீர்மானிக்கப்பட்டது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

கே. தச்சனாமூர்த்தி,
தலைவர்,
ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆராச்சிக்கட்டுவ,
2020, மே 14.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் தொகுதியின் 216 ஆம் ஏற்பாட்டுக்கு இணங்க பின்வரும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு, 2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று அத்துடன் 2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை பொது மக்களின் தகவல் பொருட்டு பகிரங்கப்படுத்துவதற்கு பொதுக்கூட்டம் தீர்மானித்துள்ளது.*

**அட்டவணை I**

ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை

***2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவினக் கணக்கு***

| | | 2019 | 2018 |
|---|---|---|---|
| 1. | **மீண்டு வரும் வருமானம்** | | |
| 10 | வீதவரியும்வரியும் | 7,595,208.67 | 7,517,125.56 |
| 20 | வாடகை | 7,990,282.21 | 9,505,303.25 |
| 30 | உத்தரவுப்பத்திரக்கட்டணங்கள் | 1,561,293.64 | 1,209,172.00 |
| 40 | சேவைகளுக்கான கட்டணங்கள் | 1,307,477.67 | 1,134,002.42 |
| 50 | குற்றப்பணமும்பிடியாணை கட்டணமும் | 11,125,199.94 | 8,750,033.45 |
| 60 | ஏனைய வருமானங்கள் | 14,289,082.12 | 9,285,624.41 |
| 70 | வருமான நன்கொடை | 30,366,316.63 | 30,479,031.39 |
| | **மொத்த மீண்டுவரும்வருமானம்** | **74,234,860.88** | **67,880,292.48** |
| 2. | **மீண்டு வரும் செலவினம்** | | |
| 01 | சம்பளமும்படியும் | 41,207,020.87 | 36,233,864.16 |
| 02 | பிரயாணச்செலவு | 586,823.00 | 339,796.10 |
| 03 | வழங்கலும்உபகரணமும் | 6,683,378.65 | 7,803,164.11 |
| 04 | மூலதன சொத்து திருத்தமும்பராமரிப்பும் | 5,900,248.98 | 7,094,264.88 |
| 05 | போக்குவரத்து, இணைப்பு,சேவைகள் | 8,621,299.10 | 6,017,136.93 |
| 06 | வட்டி செலுத்துதலும்பங்கிலாபமும் | 6,162.83 | 0.00 |
| 07 | நன்கொடை, உதவு தொகை, மானியம் | 770,833.01 | 202,642.54 |
| 08 | ஓய்வூதியமும்ஓய்வூதிய பணிக்கொடையும் | 640,155.63 | 99,120.77 |
| | **மொத்த மீண்டுவரும்செலவினம்** | **64,416,922.07** | **57,789,989.49** |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகரித்த/ குறைந்த வருமானமும் செலவினமும்** | **9,817,938.81** | **10,090,302.99** |
| 3. | **மூலதன செலவினம்** | | |
| | 80மூலதன நன்கொடை | 525,000.00 | 3,391,878.66 |
| | **மீண்டுவரும் செலவினத்தை விட அதிகரித்த வருமானமும் மூலதன வருமானமும்** | **10,342,938.81** | **13,482,181.65** |
| 4. | **மூலதன செலவினம்** | | |
| 09 | உபகரணச்செலவு | 13,641,468.96 | 8,743,894.25 |
| | **மிகை அல்லது குறைவு** | **-3,298,530.15** | **4,738,287.40** |

**அட்டவணை II**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

***2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று***

| சொத்துக்கள் | குறிப்பு | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | 06 | 210,786,789.74 | 169,762,455.07 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 07 | 1,434,757.89 | 1,445,409.35 |
| வருமான கடன்பட்டோர் | 08 | 75,842,062.45 | 67,663,268.72 |
| ஊழியர் கடனும் முற்பணமும் | 09 | 7,791,835.49 | 7,173,362.69 |
| முதலீடுகள் | 10 | 15,921,409.85 | 5,365,247.07 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 11 | 6,787,055.64 | 4,397,376.84 |
| பெறவேண்டிய வருமானம் | | 0.00 | 1,000.00 |
| | | 107,777,121.32 | 86,045,664.67 |
| **மொத்த சொத்துக்கள்** | | **318,563,911.06** | **255,808,119.74** |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| திரண்ட நிதியமும் ஒதுக்கமும் | 12 | 283,410,614.09 | 243,874,403.15 |
| | | 283,410,614.09 | 243,874,403.15 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| நடப்புப் பொறுப்புக்கள் | 13 | 35,153,296.97 | 11,933,716.59 |
| | | 35,153,296.97 | 11,933,716.59 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **318,563,911.06** | **255,808,119.74** |

**அட்டவணை III**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

***2019.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று***

| | | 2019.12.31 | 2018.12.31 |
|---|---|---|---|
| | **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | *சாதாரண நடவடிக்கையிருந்தான மிகை/(குறைவு)* | *9,817,938.81* | *10,090,302.99* |
| | **பணமல்லாத அசைவுகளுக்கான சீராக்கம்** | | |
| | தேய்மானம்/வட்டி | - | - |
| | பணிக்கொடை ஏற்பாடு | - | - |
| | முந்திய வருட சீராக்கம் | *1,810,406.42* | *1,353,330.34* |
| | **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு மிகை/குறைவு** | ***11,628,345.23*** | ***11,443,633.33*** |
| | இருப்பு/கடன்படுநர், பிற வருமதிகள் (அதிகரிப்பு)/குறைவு | *(8,785,615.07)* | *11,041,908.68* |
| | கடன்கொடுநர், பிற சென்மதிகளின் அதிகரிப்பு/(குறைவு) | *23,219,580.38* | *(15,686,132.48)* |
| *01.* | **செயற்பாட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | ***26,062,310.54*** | ***6,799,409.53*** |
| | **முதலீட்டு நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | ஆதன (கொள்ளல்)/விற்றல் | *(10,556,162.78)* | - |
| | மூலதன செலவினம் | *(13,641,468.96)* | *(8,743,894.25)* |
| *02.* | **முதலீட்டு நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | ***(24,197,631.74)*** | ***(8,743,894.25)*** |
| | **நிதி நடவடிக்கையிருந்தான காசுப்பாய்வு** | | |
| | மூலதன பெறுவனவு | *3,391,878.66* | *3,391,878.66* |
| | கடன் எடுத்தல்/(செலுத்தல்) | | |
| *03.* | **நிதி நடவடிக்கையிருந்தான தேறிய காசுப்பாய்வு** | ***525,000.00*** | ***3,391,878.66*** |
| | **வருடத்தினுள் தேறிய அசைவுகள் (1 + 2 + 3)** | ***2,389,678.80*** | ***1,447,393.94*** |
| | **வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | ***4,397,376.84*** | ***2,949,982.90*** |
| | **வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு II)** | ***6,787,055.64*** | ***4,397,376.84*** |
| | **குறிப்பு II :** | | |
| | *மக்கள் வங்கி - சிலாபம்* | | |
| | *பொதுக்கணக்கு - 24100150863528* | *6,691,991.11* | *4,341,721.79* |
| | *ஊழியர் கடன் கணக்கு - 24100240863528* | *95,064.53* | *55,655,05* |
| | **கையிலுள்ள காசு** | ***6,787,055.64*** | ***4,397,376.84*** |

*08-207*

## பருத்தித்துறை நகரசபை

*தீர்மான இல. : C54/2020*

*பருத்தித்துறை நகரசபை தவிசாளர் யோசேப்பு இருதயராசா ஆகிய நான் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயாம்) 184 அ ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 90, 91 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக பருத்தித்துறை நகர சபைப் பகுதியில் வீதியில் அல்லது அதனை சூழவுள்ள இடங்களில் க ட்டி அல்லது கூட்டங்களாக திரியும் ஏதாவது மாடு, ஆடு பிடித்து விடுவிக்கும் போது கீழ்வரும் அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அவ் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2020 ஆம் ஆண்டுக்காக அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. 10 வேலை நாட்களின் பின் உரிமை கோரப்படாத மாடுகள், ஆடுகள் பகிரங்க ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும்.*

யோசேப்பு இருதயராசா,
தவிசாளர்,
பருத்தித்துறை நகரசபை.

*நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
2020, மாச்சு 19.*

**அட்டவணை**

| தொ. இல. | I ஆம் நிரல் | II ஆம் நிரல் ரூ. ச. |
|---|---|---|
| 1. | மாடு ஒன்றினை பிடிப்பதற்கான கட்டணம் | 500.00 |
| 2. | மாடு ஒன்றினை பராமரிப்பதற்கான செலவு (நாள் ஒன்றிற்கு) | 500.00 |
| 3. | மாடு ஒன்றினை விடுவிப்பதற்கான தண்டம் | 3000.00 |
| 4. | ஆடு ஒன்றினை பிடிப்பதற்கான கட்டணம் | 250.00 |
| 5. | ஆடு ஒன்றினை பராமரிப்பதற்கான செலவு (நாள் ஒன்றிற்கு) | 300.00 |
| 6. | ஆடு ஒன்றினை விடுவிப்பதற்கான தண்டம் | 2000.00 |

*08-184*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது..